திரண்டு எழும் மக்கள் சக்தியை அழிக்கும் அரசு அவனியில் இல்லை

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (16—3—50) வெளியூர் (17—3—50) [இதழ் 195

'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதே எங்கள் இதயகீதம்!

அமைதியான முறையில் அறிவுப் புரட்சியை நடத்துவோம்!

குறிஞ்சிப்பாடி மாநாட்டில் இரா. நெடுஞ்செழியன் தலைமை உரை

நம்முடைய இலட்சியத்தை அடைய ஒன்று அமைதியான முறையில் இன்றுள்ள அரசியல் அமைப்பு முறைப்படி நாம் செல்லவேண்டும். மற்றொன்று மக்களின் சக்தியைத் திரட்டி வைத்துக்கொண்டு, அச்சக்தியின் வலிவுகொண்டு பெறுவது. இந்தியப் பாராளுமன்றத்தில் நாட்டுப் பிரிவினைத் தீர்மானம் நிறைவேறவேண்டுமானால், மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் அனுமதி பெறவேண்டும். அது மட்டுமல்லாமல் தீர்மானமே கொண்டுவரலாமா, வரக்கூடாதா என்பதற்குக் குடியரசுத் தலைவரின் அனுமதிபெற வேண்டும். இப்படி நெருக்கடி நிறைந்ததாக நாட்டுப் பிரிவினை கோரிக்கையைக் கொண்டு வந்துவிட்டார்கள். இதை நாம் சமாளிக்க வேண்டும்.

நம்மை அழித்தொழிக்க ஒரு பக்கம் அரசாங்கமும், மற்றொரு பக்கம் காங்கிரசும், வேறொருபக்கம் வைதிகமும் பாடுபட்டுவருகின்றனர்.

"வரவேற்புக் குழு உறுப்பினர்களே! மாநாட்டுப் பிரதிநிதிகளே! மற்றுமுள்ள தோழர்களே!

தென் ஆற்காடு மாவட்ட முதல் மாநாட்டின் தலைவனாக என்னைத் தேர்ந்தெடுத்தமைக்காக, ஈண்டு குழுமியிருக்கும் உங்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த மகிழ்ச்சியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாகத் தென் ஆற்காடு மாவட்டக் கழகத்தினர்க்கு எனது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் காலந்தாழ்த்தி இங்கு வந்து சேர்ந்துள்ளேன். அதற்குக் காரணம், நான்வரும் வழியில் இடையூறுகள் பல எதிரே கொண்டுவந்து நிறுத்தப்பட்டமையேயாகும். காலையில் 7-மணிக்குக் கிளம்ப வேண்டிய பஸ், அதிகார வர்க்கத்தினர் கொடுத்த தொல்லைகளின் காரணமாக, நான்கு மணி நேரம் காலங் தாழ்த்தி வரவேண்டியேற்பட்டுவிட்டது.

போலீஸ் அதிகாரிகளின் அதிகாரத்திற்கும், பஸ் டிரைவர்-கண்டக்டர் ஆகியவர்களின் நேர்மைக்கும் ஏற்பட்ட போராட்டம், என்னையும், என்னோடு உடன்வந்த தோழர்களையும் அல்லல்களுக்கு உள்ளாக்கிவிட்டது. நாங்கள்வந்த பஸ்ஸிலேயே சுமார் 20 போலீஸ்காரர்கள் குறிஞ்சிப்பாடிக்கு வர முயற்சித்தார்கள். பிரயாணிகளுக்குக் கொடுத்ததுபோக மீதிஇருந்த டிக்கட்டுகள் நான்குதான். அந்த நான்கு இடங்கள்தான் போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கமுடியும் என்றும், அதற்கு அதிகமாகக் கொடுப்பதற்கில்லை என்றும், டிரைவரும் கண்டக்டரும் வாதாடினார்கள். எங்களை இறக்கி விட்டு விட்டுத் தங்களை ஏற்றுக்கொள்ளும்படியாக போலீஸ்காரர்கள் வற்புறுத்தினார்கள். பஸ் கண்டக்டர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார், இதன்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

துருக்கியில் பொதுத் தேர்தல்

கலப்பு மந்திரிசபை ஏற்படுவது கடினமே!

இஸ்தான்புல், மார்ச். 15—

துருக்கியில் பொதுத் தேர்தல் மே மாதம் 14ந்தேதி நடைபெறவிருக்கிறது.

ஜனநாயகக் கட்சி, எதிர் கட்சி இவைகளுக்குத் திருப்தியளிக்கும்வகையில், புது வாக்காளர் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

எல்லா அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு அளிக்கப்படலாம் என்றும், சர்க்காரை ஆதரிக்கும் 'பீபிள்ஸ்' கட்சியைச் சேர்ந்த அரசியல் கைதிகளுக்கு முக்யமாக மன்னிப்பு அளிக்கப்படும் என்றும் அங்காரா செய்தி ஒன்று கூறுகிறது. தேர்தல் முடிந்தபின் கலப்பு மந்திரிசபை ஏற்படுவது நிச்சயம் என்று தெரியவில்லை.

அங்கேயும் அந்தச் சட்டம்

கெய்ரோ, மார்ச் 15—

லெபனானில் அவசர நிலைமை ஏற்பட்டால் அதைச் சமாளிக்க சர்க்காருக்கு அதிக அதிகாரங்களைத்தரும் சட்டம் லெபனான் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அயலாருக்கு ஆதரவு ஏன்?

ஸிரியா தொழிலாளர்களின் கோரிக்கை

டமாஸ்கஸ், மார்ச். 15—

ஸிரியாவில் அதன் மக்கள் வேலையில்லாது தவிக்கும்போது, அயல் நாட்டினருக்கு வேலை அளிக்கக்கூடாதென்று ஸிரியா தொழில் அதிகாரியிடம் தொழிலாளர் யூனியனின் சார்பில் சென்ற தூதுகோஷ்டி மறுப்புத்தெரிவித்திருக்கிறது என்று தெரிகிறது.

இடதுசாரி முன்னணி ஏற்படுத்துக!

(0)

இஸ்ரேலுக்கு ரஷ்யா உத்தரவு

அம்மான், மார்ச். 15—

இஸ்ரேல் சர்க்காரை ரஷ்யா திரைமறைவிலிருந்து ஆட்டிவைக்கிறதென்பது இப்பொழுது யூத பத்திரிகைகள் வெளியிட்டுள்ள ஒரு செய்தியிலிருந்து ருசுவாகியிருக்கிறது.

யூத இடதுசாரிக் கட்சிகள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து, ஐக்ய முன்னணியை அமைத்துக்கொள்ளும்படி மாஸ்கோ உத்திரவிட்டிருப்பதாக அச் செய்தி கூறுகிறது.

தொழில்களை தேசிய மயமாக்கினாலும் தொழிலாளர் பிரச்னை தீராதாம்!

காமராஜரின் விசித்திரவாதம்!

"தொழில்களைத் தேசிய மயமாக்குவதால், தொழிலாளர் பிரச்னை தீர்ந்துவிடாது. இதனால் சர்க்காருக்கு சற்று அதிகப்படியான வருவாய் கிடைக்கலாமே யொழிய, இதனால் தொழிலாளருக்கு எத்தகைய பலனும் இல்லை. ரயில்வே, பஸ் முதலியன தேசீய மயமாக்கப்பட்டதால் தொழிலாளர் பிரச்னை தீர்ந்துவிடவில்லை. நான் தொழில்கள் தேசீய மயமாவதை எதிர்ப்பவனல்ல. இன்றைய நிலையில் தக்க தொழிற் பயிற்சி பெற்றவர்கள் அரிதாக இருக்கிறது. எனவேதான், தொழிற்சாலைகளை சர்க்காரே மேற்கொள்வது கடினமையாக இருக்கிறது"

என்று தோழர் காமராஜர் கோயம்புத்தூரில் மதுக்கரை சிமெண்ட் தொழிலாளர் மாநாட்டுக்குத்தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கண்டுபிடித்துவிட்டார் காமராஜர் அரியதோர் உண்மையை!

தொழில்கள் அரசியலார் வசமானால், தனிப்பட்ட முதலாளித்வம் தகர்க்கப்பட்டு தொழிலாளர் நலம் பெற மார்க்கமுண்டாகும் எனக் கூறுவர், அரசியல், பொருளியல் அறிந்த அறிஞர்கள். அனுபவ உண்மையும் அதுவே. அவ்வனமிருக்கத் தோழர் காமராஜர், சற்றும் தயக்கமின்றி, தாராளமாகக் கூறுகிறார் தொழில்கள் தேசீய மயமாவதால் தொழிலாளர் பிரச்னை தீராதென்று.

அதுமட்டுமின்றி தொழில்களைத் தேசீய மயமாக்கத் தொழிற்பயிற்சி உடையோர் கிடைக்கவில்லை என்று வெட்கமின்றி கூறுகிறார்.

தொழில்கள் தேசீய மயமாவதால் தொழிலாளர் பிரச்னையேதீராதென்று கூறுவதன்மூலம், அடிப்படை உண்மையையே ஏற்க மறுக்கும் தோழர் காமராஜர் அத்துடனாவது நின்றாரா? இல்லை; அங்ஙனம் தேசீய மயமாக்கும் ஆற்றல் அரசியலார்க்கு இல்லை என்பதை ஒப்புக்கொள்ளும் முறையில், தொழிற்பயிற்சிப் பெற்றோர் கிடைக்கவில்லை என்கிறார்! அரசியலார் மனது வைத்துப் பணியாற்ற முற்பட்டால், பயிற்சிப் பெற்றோர் கிடைக்காமற் போகார். பயிற்சிப் பெற்றோர் பலர் உளர்; அரசியலாக்கு அவர்கள் இருக்கும் இடம் தெரியவில்லை போலும்! சரி, அப்படியே பயிற்சிப் பெற்றோர் கிடைக்காவிடினும், அயல்நாட்டிலிருந்தேனும் அத்தகைய தொழிற்பயிற்சி பெற்றோரை வரவழைத்து, அவர்களைக் கொண்டு காரியமாற்றலாம். எதற்கும் மனமிருந்தால் மார்க்கமுண்டு.

பெல்ஜிய மன்னர் திரும்பி வருவாரா?

பிரஸ்ஸல்ஸ், மார்ச். 15—

பெல்ஜியத்தில் ஏற்பட்ட பொதுஜன வாக்கெடுப்பில் மன்னர் லியோபால்டு திரும்பி பதவிக்கு வரவேண்டும் என்பதற்கு மெஜாரிட்டிவோட்டுகள் கிடைத்த பின்பும் மன்னர் திரும்பி வருவது நிச்சயம்தானா என்று தெரியவில்லை.

அதேர்தபடியாக நடைபெறவேண்டியது பெல்ஜிய பார்லிமெண்டின் இரு சபைகளும் கூடி மன்னரை அழைத்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

லியோபால்ட் மன்னரோ என்ன முடிவு செய்கிறார் என்பது இன்னும் தெரியவில்லை. அவர் முடிதுறக்கவே ஆசைப்படுவதாக சில வதந்திகள் இருந்து வருகின்றன.

ஜினிவாவில் லியோபால்டுடன் பெல்ஜியப்பிரதமர் சீக்கிரத்தில் சம்பாஷித்து வருவது ஏதோ தகராறுகள் இருப்பதையே காட்டுகிறது என்று சொல்லப்படுகிறது.

சூடானில் வேலை நிறுத்தம்

லண்டன், மார்ச். 15—

சூடானில் சமீபத்தில் ஏற்பட்ட வேலை நிறுத்தம் கம்யூனிஸ்டுகள் தூண்டிவிட்டதே என்று, சூடான் அஸெம்பிளியில் அறிவித்ததாக கார்ட்டூம் செய்தி ஒன்று கூறுகிறது.

கிஸான்கள் கிளர்ச்சி வெற்றி பெறுகிறது

இத்தாலிய சர்க்காரின் இறுமாப்பு அடங்குகிறது!

ரோம், மார்ச். 15—

தென் இத்தாலியில் மிகவும் பரவியுள்ள கிஸான்களின் ஆக்ரமிப்பு இயக்கத்தை நிறுத்த உள்ள ஒரே வழி, நிலச் சீர்திருத்தத் திட்டத்தை வெளியிடுவதே என்பதை இதாலிய சர்க்கார் உணர்ந்து விட்டதாகத் தெரிகிறது.

இத்தாலிய பிரதமர் காஸ்பிரி நிலச் சீர்திருத்தத் திட்டத்தை அறிவித்து, ஜூலை முதல் தேதி முதல் நடத்தப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

இத்திட்டம் பத்து ஆண்டுத் திட்டமாகுமாம். இதனால் சுமார் 1000 நிலச்சுவான்கள் அளவுக்கு மீறி வைத்துள்ள நிலங்களை இழக்கும்படியாக இருக்குமாம். இந்த நிலங்களை எடுத்துக்கொள்வதற்குச் சர்க்கார் ஈடுத்தொகை கொடுக்க உத்தேசித்திருக்கிறது.

ஒரு குடும்பம் இவ்வளவு அளவுக்குத் தான் நிலம் வைத்துக்கொள்ளலாம் என்பது நிர்ணயிக்கப்படுமாம்.

இவ்வாண்டில் 6 கோடி ஸ்டர்லிங்கையும், அடுத்த ஆண்டில் 6 கோடி ஸ்டர்லிங்கையும் இத்திட்டத்திற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மாலை மணி

சென்னை 16—3—50 வியாழக்கிழமை

ஆணவம் பேசுகிறது!

" ஆலோசகர்கள் ஆட்சிக் காலத்தில், மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள ஆலோசகர்கள், இன்றைய அரசாங்கத்தைவிட திறம்பட ஆட்சி செய்திருக்கையில் இப்பொழுதுள்ள மந்திரிகள் 13 பேர்களை 10 பேர்களாகக்குறைக்க முடியாதா ?"

என்று தோழர் எஸ். நாகப்பா அவர்கள், சென்னை ஆட்சி மன்றத்தினரைப் பார்த்து, சென்னை சட்ட சபையில் கேட்டுள்ளார். அரசாங்கத்தின் செலவினங்களைக் குறைக்கும் வழிகளைப் பற்றிய பிரச்சினை சட்ட சபையில் எழுந்தபோது தான், தோழர் நாகப்பா மேற்கூறிய யோசனையைக் கூறியுள்ளார்.

தோழர் நாகப்பா, எதிர்க் கட்சியைச்சேர்ந்தவரல்ல, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் தான்! ஆட்சிப் பீடத்திலிருப்பதும் அவரது கட்சியைச்சேர்ந்த ஆட்களே! அவர் எண்ணுகிருர், சென்னை ஆட்சி மன்றத்தில் அதிகப்படியான மந்திரிகள் இருக்கிருர்கள், அவர்கள் எண்ணிக்கைக் குறைந்தால் நல்லது என்று உடனே ஆட்சியாளரைக் கேட்கிருர், 13 மந்திரிமார்களை 10 ஆக ஆக்கக்கூடாதா—முடியாதா என்று. அந்த அளவோடுகூட அவர் நிறுத்தவில்லை, மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய ஆலோசகர்கள் திறம்பட—காங்கிரஸ் ஆட்சியைவிடத் திறம்பட ஆண்டுகாட்டமுடிந்த போது, அவர்களைவிடக் கொஞ்சம் அதிக எண்ணிக்கையுடைய மந்திரிகள் ஏன் திறம்பட ஆள முடியவில்லை என்று இடித்துக் கூறும் முறையில் கேட்டுள்ளார்.

குறைந்த எண்ணிக்கையுடைய ஆலோசகர்கள் நன்கு ஆண்டார்கள்—அந்த அளவு எண்ணிக்கையைக் கொண்ட காங்கிரஸ்காரர்கள் ஏன் நன்கு ஆளக்கூடாது —மந்திரிகளின் எண்ணிக்கையை ஏன் குறைக்கக் கூடாது —இவ்வளவுகேட்டுள்ளார் ஒரு உறுப்பினர். அதற்கு மந்திரியார் கூறும் பதில் அறிவொளி வீசுவதாகத் தெரியவில்லை, ஆணவ மணங் கமழ்வதாகவே இருக்கிறது

' இப்பொழுது பதின்மூன்று மந்திரிகள் இல்லையே !"

என்ற பதிலைத்தந்துள்ளார், தோழர் நாகப்பா அவர்கள் கேட்ட கேள்வி முழுவதற்கும் இதுதான் பதில்! இப்பொழுது பன்னிரண்டு மந்திரிகள் உள்ளனராம், ஆனல் தோழர் நாகப்பா பதின்மூன்று என்று குறிப்பிட்டுவிட்டாராம். ஆகவே அதைத் திருத்துகிறமுறையில், இப்பொழுது பதின்மூன்று மந்திரிகள் இல்லை என்று வேடிக்கை பேசுகிருர் மந்திரி கோபால் ரெட்டியார்.

மந்திரிகளின் எண்ணிக்கை ஏன் குறைக்கக் கூடாது? என்ற கேள்விக்குப் பதிலில்லை. குறைக்க வழியேயில்லை, குறைக்கவே முடியாது என்று மந்திரியார் சொல்லமுடியாது என்பதற்குத்தான், தோழர் நாகப்பா சுட்டிக்காண்பிக்கிருர் ஆலோசகர்கள் ஆட்சியிலே குறைந்த எண்ணிக்கையுடையவர்கள் இருந்தார்கள் என்பதை.

மந்திரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைகளை, வெளியூர்கள் சுற்றித் திரியாமல், அலுவலகத்தில் இருந்து மந்திரிகள் வேலைபார்க்கத் தொடங்குவார்களேயானல், உள்ளபடியே இவ்வளவு மந்திரிகள் தேவையில்லை, இவர்களில் பாதிப்பேர்களே போதும். பொதுமக்களால் ஒப்படைக்கப்பட்ட வேலைகளை ஒழுங்காகப் பார்க்காமல், ஊர் சுற்றித் திரிந்து கட்சிப் பிரசாரமும், பிறவும் செய்துவருவதிலேயே இன்றைய மந்திரிகள் பாதி நாட்களைக் கழிக்கிருர்கள் என்பது. அரசாங்கத்தவரே கொடுக்கின்ற கணக்கிலிருந்து தெரிகிறது; மந்திரிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டால்—வெற்றுச் சுற்றுப்பிரயாணம் நிறுத்தப்பட்டால்உள்ளபடியே அரசாங்கத்தின் அதிகப்படியான செலவுகுறையவழி யேற்படலாம்.

தோழர் நாகப்பா மக்களின் கருத்தை ஓரளவுக்குப் பிரதிபலித்துக் காட்டினர் என்றுதான் சொல்லவேண்டும். மந்திரிகளின் எண்ணிக்கை குறைக்க வேண்டுமென்ருல், ஆட்சிப்பீடம் ஆணவச் சிரிப்பு சிரிக்கிறது; கேலி செய்கிறது எத்துணை நாட்களுக்கு இந்தத் தர்பார் நடைபெறுமென்று மந்திரியார் எண்ணுகிருரோ தெரியவில்லை! மக்கள் மிக நெருக்கமான அளவில்தான் கணக்கிடுகிருர்கள்! தோழர் நாகப்பாவின் கேள்விக்கு அமைச்சர் அல்ல பதில் கூறுவது; ஆணவம் பேசுகிறது. நன்ருகப் பேசட்டும்—முடியாத மட்டும் பேசட்டும்!

இந்தோனேஷியா துண்டாடப்படுமா?

லண்டன், மார்ச். 15—

இந்தோனேஷ்யாவின் வெஸ்டர்லிங்கின் படை சிறுகுழுவும் ஒரு பிரிவின் இந்தோனேஷ்ய சர்க்காருக்குப் பெரும் தொல்லையைக் கொடுக்க தாருல் இஸ்லாம் இயக்கம் முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

இல்ல மிக ஆசை ஏற்படுத்து முயலும் இந்த இயக்கத்தில், வெஸ்டர்லின் படையிலிருந்தவர்கள் சேர்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களுக்கு ஆயுதங்கள் வெளியிடத்திலிருந்து கிடைத்து வருவதாகவும், கூறப்படுகிறது. ஒரு மூல [illegible] சட்டை நடப்பதைத் தடுத்துவிடுமாக இந்தோனேஷ்ய அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்திய ஆடைத் தொழில் பற்றி கிருஷ்ணமேனன்

லண்டன், மார்ச். 15—

"கிழக்கிந்திய கம்பெனியார் இந்தியாவில் நிர்வாகம் நடத்திவந்த காலத்தில் ஏராளமான துணிகளை அயல் நாட்டிலிருந்து இந்தியா வாங்கிவந்தது. அந்த நிலைமை நிலைகீழாக மாற்றி அயல் நாடுகளுக்கு துணி சப்ளை செய்யும் நாடாக இந்தியாவை செய்து விட்டோம்." என்று இங்குள்ள இந்திய ஹைகமிஷனர் கிருஷ்ணமேனன் வியாழனன்று லண்டனில் ஆரம்பமாகப்போகும் இந்தியத் துணிப் பொருட்காட்சியின் பூர்வாங்க கூட்டத்தில் கூறினர்.

இக்கண்காட்சி வியாழனன்று திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இந்தியாவின் ஜவுளித் தொழிலின் முன்னேற்றத்தை பிரிட்டனிலுள்ளவர்களுக்கு வெளிப்படுத்தவே இக்கண்காட்சி நடத்தப்படுகிறதென்று இந்திய வர்த்தகக் கமிஷனர் கூறினர்.

'ஆண்டவரு'க்கு வானெலி நிலையம்!

ரோம், மார்ச். 15—

போப்பாண்டவரின் கோடைகால வாசஸ்தலமான "காண்டால்போ" கோட்டையைச் சேர்ந்த 25 ஏகர் விஸ்திரணமுள்ள பிரதேசத்தில் மிகவும் சக்தி வாய்ந்த ரேடியோ நிலையம் ஒன்றை ஏற்படுத்த, வாடிகன் உத்தேசித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கு இத்தாலிசர்க்கார் சம்மதம் அளித்து விட்டதாகத் தெரிகிறது.

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை

68,000 மாணவர் எழுதுகிருர்கள்

சென்னை, மார்ச். 15—

சென்னை மாகாணத்தில் 450 இடங்களில் இன்று ஆரம்பமாகும். எஸ். எஸ். எல். ஸி பரீட்சைக்கு 68000 மாணவர்கள் எழுதுவார்கள். இதுவரை இவ்வளவு மாணவர்கள் எப்பொழுதும் ஒரு தடவையில் பரீட்சை எழுதியதில்லை. 1949-ம் பரீட்சைக்கு உட்கார்ந்த மாணவர்களைவிட இது 16000 அதிகமாகும். 1949 அக்டோபரில் ஒரு மறுபரீட்சை நடந்தபின்பும் இவ்வளவு பேர் எழுதுவது குறிப்பிடத்தக்கதாகும். சென்னை மாகாணத்தில் இப்பொழுது படிக்கும் மொத்த மாணவரின் எண்ணிக்கை இந்த அளவு இதுவரை எப்பொழுதும் இருந்ததில்லை.

கோச்சு வண்டிக்குள் குண்டு!

லண்டன், மார்ச். 15—

ஸஸெக்ஸ் ருடோபத்திலிருந்த கோச்சுவண்டி முழுது பார்க்கப்பட்டபோது, அதில் ஒரு வெடிக்காத குண்டு இருப்பது தெரியவந்ததாம்.

1943-ல் ஜெர்மன் விமானம் குண்டு வீசிய பொழுது வண்டியில் இக்குண்டு விழுந்து தங்கியிருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

இராக் - இலங்கை வர்த்தக உடன்படிக்கை

கெய்ரோ, மார்ச். 15—

இலங்கையுடன் வர்த்தக உடன்படிக்கை செய்து கொள்ளும் விஷயமாக இராக் சர்க்கார் யோசனை செய்து வருகிறதென்று கூறப்படுகிறது.

அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி நினைவு வாரம்

திராவிட முன்னேற்றக் கழகம் எந்த இலட்சியத்திற்காக நாட்டில் பாடுபட்டு வருகிறதோ, அந்த இலட்சியத்திற்காகவேபாடுபட்டு, இறுதிவரையில் கொள்கையை விட்டுக்கொடுக்காது உழைத்து மறைந்த மாவீரன்—அஞ்சாநெஞ்சன் அழகர்சாமியின் நினைவுநாள் மார்ச் 28-ம் நாளாகிறது. அந்த நாளை முதலாகக்கொண்ட ஒரு வார காலத்தை, அதாவது 28—3—50 முதல் 3—4—50 வரை உள்ள வாரத்தை "அஞ்சாநெஞ்சன் அழகர்சாமியின் நினைவு வாரமா"கக் கொண்டாடும்படி கிளைக் கழகங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

செய்யவேண்டிய செயல்கள்:-

1. கழகக் கட்டிடத்தில் கொடியேற்றுவித்தல்.
2. அழகர்சாமியின் உருவப் படங்களைப் பொதுஇடங்களில் கட்டுதல்—அச்சடித்துப் பலருக்கும் கொடுத்தல்.
3. அழகர்சாமியின் வாழ்க்கை வரலாற்றைத் துண்டு வெளியீடுகள் மூலம் வெளியிடுதல்.
4. பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவுகளின் மூலம் வீர வணக்கம் செலுத்துதல்.

சி. என். அண்ணுதுரை

பொதுச்செயலாளர்

தி. மு. கழகம்

மெயில், எக்ஸ்பிரஸ் வேகம் அதிகரிப்பு

பம்பாய், மார்ச் 13—

97 டன் எடை கொண்டு அதிக சக்தி வாய்ந்த கனடிய எஞ்ஜின்கள் உபயோகிப்பு காரணமாக ஏப்ரல் 1-ந் தேதி முதல் மெயில் எக்ஸ்பிரஸ் ரயில்களின் வேகம் அதிகரிக்கப்படுமென்று இங்கு ரயில்வே அதிகாரி ஒருவர் கூறினர்.

பம்பாய் சென்னை எக்ஸ்பிரஸ் ரயில் 1 மணி 5 நிமிடம் முன்னதாகவும், சென்னை பம்பாய் எக்ஸ்பிரஸ் 35 நிமிடம் முன்னதாகவும்வரும். பம்பாய்சென்னை மெயில் 35 நிமிடம் முன்னதாகவும், சென்னை பம்பாய் மெயில் 10 நிமிடம் முன்னதாகவும் வந்து சேரும்.

ஜப்பானில் பெண் குற்றவாளிகள்

மூன்று மடங்காகிவிட்டார்கள்

யுத்த காலத்துக்குமுன் செய்ததைவிட மூன்று மடங்கு குற்றங்கள் ஜப்பானியப் பெண்கள் செய்கிருர்களென்று டோக்கியோ போலீஸ் அதிகாரி ஒருவர் அறிவித்தார். பெண்கள் கொலை, கொள்ளைகளைக்கூட இப்பொழுது அதிகமாகச் செய்கிருர்களாம்.

ஜப்பான் ஜவுளிகளுக்குக் கனடா சுங்கவரி

ஆட்டவா, மார்ச். 15—

கனடாவின் உள்நாட்டு ஜவுளித் தொழிலைக் காப்பாற்றுவதற்காக இறக்குமதியாகும்ஜப்பானிய ஜவுளிகளுக்கு அதிகசுங்கவரிகளைக்கனடா சர்க்கார் விதிக்கலாம் என்று தெரிகிறது. ஜப்பானிய வெள்ளை ஷர்ட்டுகள் சுமார் 5 லக்ஷம் மிகவும் குறைவான விலைக்கு விற்கப்பட்டதாம்.

கார்ப்பொரேஷனுக்கு அரசாங்கம் கொடுக்கும் கடன்

'3 சதவட்டியே வாங்க வேண்டும்?'

சென்னை, மார்ச். 15—

சென்னை நகராண்மைக்கழகத்துக்கு அரசாங்கம் இப்பொழுது கொடுத்துள்ள கடனுக்கும், இனி கொடுக்கப்போகும் கடனுக்கும் மூன்று சதவிகிதம் தான் வட்டி வாங்கவேண்டுமென்று நேற்று நகராண்மைக் கழகக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

மேயர் டாக்டர் பி. வி. செரியன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் தேவராஜ செட்டி தீர்மானத்தைக்கொண்டு வந்தார்.

தோழர் எம். ராதாகிருஷ்ணப்பிள்ளை தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் அரசாங்கம் விட்டுக்கொடுக்காதென்று தான் நினைத்தால் மேலும் கமிஷனரும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளவேண்டுமென்று கூறினர்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறிற்று.

மேயர் நிதிக்கு ரூ 2000

மேயர் நிவாரண நிதிக்கு ரூ. 2000 உதவுவதென்று நகராண்மைக் கழகத்தில் முடிவு செய்யப்பட்டது.

பூந்தமல்லியில் நடக்கும் விக்டோரியா மெமோரியல் குருடர் பாடசாலைக்கு வருடாந்திரம் கொடுத்து வந்த ரூ 1500 நிறுத்துவதென்று முடிவாக்கப்பட்டது. அரசாங்கம் இப்பாடசாலையை எடுத்துக்கொண்டதே இதற்குக் காரணம்,

கல்வி வரவுசெலவுத் திட்டம்.

ஆரம்பக்கல்விக்காக 1949-50ல் போடப்பட்ட வரவு—செலவுத் திட்டத்தில் வரவு ரூ.25,43 614, செலவு ரூ 27,07 654; இதனுல் கிழுக் துண்டு ரூ. 1 64 040.

1950-51க்கு வரவு ரூ.27,85909, செலவு ரூ 27,85,820. இதில் உபரி ரூபாய் 89.

வருகின்றஆண்டில் 15 இடங்களில் புதிதாகப் பள்ளிக்கூடம் திறப்பதுடன், நகர பாடசாலைகள் பல சீர்திருத்தப்படும்.

புதிதாக 150 ஆசிரியர்களும் ஒரு உதவி கல்வி அதிகாரியும் நியமிக்கப்படுவார்கள். வரவு செலவுத் திட்டத்தின்படி பள்ளிகளுக்காகக் கட்டிடங்கள் கட்டவும், இதர செலவுகளுக்காகவும் அரசாங்கத்திடம் ரூ 8,29,500 கடன் வாங்க நகராண்மைக்கழகம் முடிவு செய்துள்ளது.

நடுத்தர ஆசிரியர்களின் சம்பளம் ரூ. 35-1-55 லிருந்து 35-2-65 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது

திரண்டு எழும் மக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக போலீஸ் ஸ்டேஷனிலேயே பஸ் நிறுத்தப்பட்டு, பிறகு டி. எஸ். பி வீட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு அவரிடம் முறையிடப்பட்டுக் காலதாமதம் செய்யவே, நாங்கள் தனிக் கார்தேடிப்பிடித்து, அதற்கான பெட்ரோலும் வாங்கிக்கொண்டு, தனியே புறப்பட்டு வந்தோம் எங்களை அந்த அளவுக்கு அலங்கழித்து விட்டார்கள் போலீஸ்காரர்கள். எல்லா ஊர்களிலும் இப்படியே இருப்பார்கள் என்று கூறவில்லை; கடலூரில் இப்படி நடத்தினார்கள்; அங்குள்ள சப்இன்ஸ்பெக்டர் ஒரு பார்ப்பனர் என்று பிறகு தெரிய வந்தது. இதுதான் மக்களுக்கு உரிமை வழங்கும் 'சுயராஜ்ய சர்க்கார்'! (சிரிப்பு). இப்படிப்பட்ட அலங்கோல ஆட்சி நாட்டில் நடைபெறும் இந்தக் காலத்தில்தான் நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

ஒருவித உன்னத இலட்சியத்தை இதயத்தில் ஏற்றுக்கொண்டு, அந்த இலட்சியத்தை அடைவதற்கான வழியைக் காண நாம் அனைவரும் இங்கு கூடியுள்ளோம். நம் இதயங்களின் நாடிகளைத் தட்டிப் பார்த்தால் அவைகள் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்று ஒலிக்கும். அந்த இலட்சிய ஒலியால் கட்டுண்டு கிடக்கும் நாம், களம் காணப் புறப்பட்டுள்ளோம்.

அச்சம் முட்டித்தான் ஆகவேண்டுமா?

நம்முடைய சமுதாய அமைப்பையும், அதற்கு ஆதாரமாக விளங்கும் பொருளாதார நிலையையும், அவை இரண்டையும் நடத்திச் செல்வதற்கான அரசியல் திட்டத்தையும், ஒன்றோடொன்று பொருத்திப் பார்க்கும்போது நமக்குக் கிடைப்பது இன்பத் திராவிடமாகும். அகில உலகிலும் உள்ள மக்களினங்கள் தங்கள் தங்கள் பண்பு — பழக்கவழக்கம் — கொள்கை — கோட்பாடு — மொழி — கலை — நாகரிகம் இவற்றிற்கு ஏற்றவண்ணம் நாடுகளை அமைத்துக்கொண்டு வாழும்போது, நாம் ஏன் நமக்கு ஏற்ற நாட்டை உருவாக்கிக்கொள்ளக் கூடாது. நாம் கோரும் திராவிடம் வரலாற்றுச் சான்றுகள்படி, இலக்கியச் சான்றுகள்படி தனி நாடாக இருந்ததாகும். ஆகவே தான், வரலாற்றைக் காட்டி, இலக்கியத்தைக் காட்டி, கொள்கைக் கோட்பாடுகளைக் காட்டி நாம் தனிநாடு 'கோருகிறோம் நம்முடைய கோரிக்கையை மதிக்க ஆணவ அதிகாரம் வேண்டுமானால் எதிர்க்கலாமே யொழிய, நீதி — நேர்மை எதிர்க்கமுடியாது - எதிர்த்தது கிடையாது.

இந்தியா ஒரு குட்டி சாம்ராஜ்யம்

இந்தியா ஒரு துணைக் கண்டம் — அந்தத் துணைக் கண்டத்தை ஒரு ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தவை வெள்ளைக்காரர்களின் துப்பாக்கி முனை- ராபர்ட் கிளைவ் வாரன்ஹேஸ்டிங்ஸ், டல்ஹௌஸி, கார்ன்வாலிஸ் போன்ற வெள்ளைக்காரர்கள்தான் துப்பாக்கி பலத்தைக்கொண்டு இத் துணைக் கண்டத்தை வெட்டியும், ஒட்டியும் ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கினர். சாம்ராஜ்யங்கள் உலகிலே சரிந்துவரும் நாள் இது. சாம்ராஜ்யங்களின் பிடிகளிலிருந்து, ஒவ்வொரு நாடும் விடுதலை பெற்று, வீறுகொண்டெழுந்து, எழுச்சியுற்று விளங்குகின்றன. பர்மா, இலங்கை, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் விடுதலை பெற்றது போன்று இந்தியத் துணைக் கண்டமும் பெற்றுவிட்டது. விடுதலை பெற்ற பிறகும் இந்தியா ஒரு குட்டி சாம்ராஜ்யமாக ஆக்கப்பட்டிருக்கிறது — வர்க்கத்திற்கோர் வட்டாரமாகப் பிரிக்கப்படவில்லை. ஒரு நாட்டு மக்கள் தனித்து வாழ வேண்டுமென்று எண்ணிவிடுவார்களேயானால், அப்படி எழுச்சியுறும் சக்தியை எதிர்த்து நிற்கும் ஆற்றல் எவருக்கும் இருந்ததில்லை, அந்த ஆற்றலை மக்களுக்கு ஊட்டவே நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

கொள்கையில் குறைபாடில்லை

திராவிடத்தில் வாழும் ஐந்து கோடி மக்கள், தங்களை யார் என்று அறிந்துகொள்ளாமலும், தங்கள் நாடு எது என்று தெரிந்துகொள்ளாமலும் வாழும் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள். நாம் எல்லாத் துறைகளிலும் தாழ்ந்து கிடப்பதற்கு வடநாட்டு ஆதிக்கம்தான் காரணமாகும் என்பதை, உணர மாட்டாதவர்களாகப் பெரும்பாலோர் வாழுகிறார்கள். நூற்றுக்கு எண்பத்தெட்டு பேர்கள் தற்குறிகள் இந்த நாட்டிலே—இவர்களிடையே தான் நாம் நம் இலட்சியக் கோட்பாட்டை விளங்க வைக்க வேண்டும். பணபலம், படை பலம், பாராளுமன்றத்தின்பலம், படித்த கூட்டத்தின் மிக்கபலம், பத்திரிகை பலம் இவைகளெல்லாம் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால், நமது கொள்கைகள் பரவாமலிருந்திருக்கலாமே யொழிய, கொள்கைகள் தவறு என்று நேரிடையாக வாதிட்டு நின்றவர்கள் கிடையாது கொள்கையிலே உறுதியும், திட்டத்திலே நம்பிக்கையும் இருக்கும் காரணத்தால்தான் நாம் அரசியல்— பொருளாதாரம் — சமுதாயம் ஆகிய துறைகளிலே அறிவுப் புரட்சியை உண்டாக்கி வருகிறோம்.

அந்த வீரம் என்னவாயிற்று!

இந்தியாவை ஒரே ஆட்சியின் கீழ் வைத்து ஆள வேண்டும் என்ற ஆணவ எண்ணத்தோடு செயலாற்றி வரும் காங்கிரஸ், நாம் கோரும் நீதியான இலட்சியத்திற்கு செவிசாய்க்க மறுக்கிறது. பாக்கிஸ்தானைப் பற்றி ஆரம்ப காலத்தில் குறிப்பிடும்போதெல்லாம் அது வெறும் பகற்கனவு என்றும், அதற்கு அர்த்தமே இல்லை என்றும், அப்படி ஒன்று தோன்றுமானால் தங்களுடைய பிணங்கள் இடையே விழுந்த பிறகு தான் தோன்றுமென்றும் காங்கிரஸ் தோழர்கள் வீரம் பேசினர். என்ன ஆயிற்றுபிறகு? பாக்கிஸ்தானை எப்படிப் பிரித்துக் கொடுக்க சம்மதித்தனர்? காந்தியார் உயிருடன் இருக்கும்போதே, நேரு பார்த்துக்கொண்டிருக்க, பட்டேல் அருகிலிருக்க, ஆசாத் அமர்ந்திருக்க, பிரசாத் உடனிருக்க 1947 ஆகஸ்டு 14-ந் தேதி இரவு பன்னிரண்டு மணிக்குப் பாக்கிஸ்தான் பிரித்துக் கொடுக்கப்பட்டாகி விட்டதே! பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுக்கச் சம்மதித்த காங்கிரஸ் தலைவர்கள்; அதைவிட ஆயிரங் காரணங்களோடு கேட்கப்படும் திராவிடத்தைப் பிரித்துக்கொடுக்க ஏனோ மறுக்க வேண்டும்? தோழர் ஜின்னா அவர்களின் பின்னால் பத்து கோடி முஸ்லிம்களின் சக்தி திரண்டு நின்றது. அந்தச் சக்திக்கு அஞ்சியே காங்கிரஸ் தலைவர்கள் பாக்கிஸ்தானைப் பிரித்துக் கொடுப்பதற்குச் சம்மதித்தார்கள் என்றால், அப்படிப்பட்ட முறையில் ஐந்து கோடி திராவிட மக்களும் திரண்டெழுந்து, அச்சமூட்டியதற்குப் பிறகுதான் திராவிடத்தைப் பிரிக்கச் சம்மதிப்பார்களா? அந்த நிலையை வடநாட்டுத் தலைவர்கள் எதிர்பார்க்கிறார்களா? நீதியையும்-நேர்மையும் முன்னிறுத்திக் திராவிடம் பிரிந்து வாழ ஏன் வழிவகைகள் இப்பொழுதே செய்யக் கூடாது.

யதேச்சாதிகார ஆட்சியில் நாம்

வடநாட்டுப் பாசிச சுரண்டல் ஏகாதிபத்ய ஆட்சி நீங்க வேண்டும் என்பதும், சுதந்திர சமதர்மக் குடியரசு ஆட்சி திராவிடத்தில் ஏற்பட வேண்டும் என்பதும் அரசியல்துறையில் நாம் கொண்டிருக்கும் நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில்தான், இப்பொழுது இந்தியக் குடியரசு அமைந்திருக்கிறது. இந்தியக் குடியரசு என்பது நாட்டின் நிலைமைக் கேற்ப அமைக்கப்பட்ட அரசு ஆகா; அது இந்தியக் காங்கிரஸின் நிலைமைக்கேற்ப எழுப்பப்பட்ட அரசாகும். மக்களுடைய—மக்களால் நடத்தப்படும்—மக்களுடைய நன்மைக்காக இருக்கும் அரசாக இது அமையவில்லை. காங்கிரஸ்காரர்களுடைய--காங்கிரஸ்காரர்களால் நடத்தப்படும்-காங்கிரஸ்காரர்களுடைய நன்மைக்காக இருக்கும் அரசாகவே "இந்தியச் சமயரசு" அமைக்கப்பட்டிருக்கிறது. மாகாணங்களுக்குள்ள அதிகாரங்களெல்லாம் பிடுங்கப்பட்டு, மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் ஒரு யதேச்சதிகார சர்வாதிகாரியாக ஆக்கப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்டக் 'குடியரசு' அமைந்ததானது நம்முடைய போராட்டப் பாதையை மிக்கக் கடினமானதாக்கிவிட்டது.

இருமுனை எதிர்ப்பு

நம்முடைய இலட்சியத்தை அடைய ஒன்று அமைதியான முறையில இன்றுள்ள அரசியல் அமைப்பு முறைப்படி நாம் செல்லவேண்டும்; மற்றொன்று மக்களின் சக்தியைத் திரட்டி வைத்துக்கொண்டு, அச் சக்தியின் வலிவுகொண்டு பெறுவது. இந்தியப் பாராளுமன்றத்தில் நாட்டுப் பிரிவினைத் தீர்மானம் நிறைவேறவேண்டுமானால், மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் அனுமதி பெறவேண்டும், அது மட்டுமல்லாமல் தீர்மானமே கொண்டு வரலாமா வரக்கூடாதா என்பதற்குக் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற வேண்டும். இப்படி நெருக்கடி நிறைந்ததாக நாட்டுப் பிரிவினைகோரிக்கையைக்கொண்டு வந்துவிட்டார்கள். இதை நாம் சமாளித்தாகவேண்டும்.

நம்மை அழித்தொழிக்க ஒரு பக்கம் அரசாங்கமும், மற்றொரு பக்கம் காங்கிரசும், வேறொரு பக்கம் வைதிகமும் பாடுபட்டுவருகின்றன.

இன்பத்திராவிடம் பெறவேண்டும்

அரசாங்கம் அடக்குமுறைச் சட்டங்களைக்கொண்டு நம்மை அடக்கப்பார்க்கின்றன. காங்கிரஸ் பொய்ப் பிரசாரத்தின் மூலம் நம்மை அடக்கப்பார்க்கிறது வைதிகம் எல்லாத்துறைகளிலும் புகுந்துகொண்டு, வஞ்சகம், சூது, சூழ்ச்சி இவைகளின் மூலமாக அடக்கப் பார்க்கிறது. இவற்றையெல்லாம் சமாளித்து நின்று, வெற்றி பெற்று இன்பத் திராவிடத்தைக் காண நாம் அனைவரும் முற்பட வேண்டும்.

வகுப்புத்துவேஷத்தை நாம் கிளப்புகிறோம் என்று சொல்லி நமது கூட்டங்களையும்—நாடகங்களையும்- புத்தகங்களையும்- பத்திரிகைகளையும் தடை செய்ய முற்படுகிறதே அரசாங்கம். உள்ளபடியே அமைதியான முறையில் கருத்துப் புரட்சியை ஏற்படுத்தி வருபவர்கள் நாம் தாம். அகிம்சை பேசும் காங்கிரஸ்காரர்கள் பலாத்காரத்தில் இறங்கினார்கள், என்பதற்கு ஆயிரக்கணக்கான எடுத்துக் காட்டுகள் காட்ட முடியும். ஆனால் சென்ற முப்பது ஆண்டுகள் பிரசாரத்தால் வகுப்புத்துவேஷக் கலவரம் ஒன்று நடந்து, அதன் காரணமாகக் கொள்ளையோ, கொலையோ, கொள்ளி வைத்தலோ நடந்ததாக, ஒரு உதாரணம் இன்றைய அரசாங்கத்தாராலோ அல்லது காங்கிரஸ்காரர்களாலோ காட்ட முடியுமா? நம்மால் அறிவுப் புரட்சி அமைதியான முறையில்நடைபெற்றிருக்கிறதே யொழிய, அத்துமீறிய செயல் ஒன்று நடைபெற்றதாக யாரும் கூற முடியாது."

இந்திய அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டம் 1950-51-க்கு 337 கோடி ரூபாய் இதில் பாதுகாப்புக்காக மட்டும் செலவிடப்படும் தொகை 168 கோடி ரூபாய்; இது வரவுசெலவுத்திட்டத்தில் சரிபாதியாகும். வளமார் திராவிட நாட்டில் வாங்கும் வரிகள் வடநாட்டுச் சிப்பாய்களுக்காகச் செலவாக்கப்படுகிறது ரயில்வே வருமானம், தபால் தந்தி இலாகா வருமானம் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் கையில். இப்பொழுது விற்பனை வரியையும் எடுத்துக்கொள்ள முயற்சி செய்கிறது. சி. ஆர். மந்திரிசபை காலத்தில் விற்பனை வரி வருமானம் ஒரு கோடி ரூபாய். 1940-ல் 5½ கோடி இன்று 15½ கோடி ரூபாய்யார்கொடுக்கிறார்கள் இப்பணத்தை; மக்களிடமிருந்துதானே வசூலிக்கப்படுகிறது. மந்திரி கோபால் 'ரெட்டி' விற்பனை வரியைக் 'காமதேனு' என்கிறார். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் தோழர் வி. கெ. ஜான் ரத்தத்தை உறுஞ்சும் 'அட்டை' யென்று பேசினார். இந்தக் 'காமதேனு'வையும் மத்திய அரசாங்கம் பறித்துக்கொள்ளப் போகிறது.

இறுதியாக திராவிட நாட்டின் வளப்பங்களையெல்லாம் எடுத்துக்கூறி, அதன் செல்வச் சிறப்பு, அறிவுத்திறன், ஆற்றல் மேம்பாடு ஆகியவைகளையெல்லாம் விரித்துரைத்துத் திராவிடநாடு தனித்தியங்க வேண்டியதன் அவசியத்தைத் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டினார். உடல் நலமில்லாத நிலையிலும் சுமார் 1-30 மணி நேரம் உணர்ச்சியோடு கூடிய தலைமையுரையை ஆற்றினார். மக்கள் இடையிடையே கையொலியின் மூலம் ஆரவாரித்தும், சிரிப்பு கொட்டியும் தலைமைச் சொற்பொழிவை நன்கு கேட்டுக்கொண்டிருந்தார்கள். தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையுரைக்குப் பிறகு மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது (ந, நி.)

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

17-3-50

கல்லல்குண்டு :— சி. பி சிற்றரசு

19-3-50

கோவத்தூர் [மேட்டூர்]— இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு

பொள்ளாச்சி:— ஈ வெ. கி. சம்பத், என். ஈ பாலகுரு, ஏ. வி. எம். சாமி, கோ. கோபால்

ஹோசிமின் படைதிரட்டுகிறார்

பாரிஸ், மார்ச். 14—

வியட்னும் படைத்தலைவர் ஹோசிமின், 18 வயதுமுதல் 45 வயது வரையிலுள்ள ஆண்கள் ராணுவத்தில் சேர வேண்டுமென கட்டாய உத்திரவு ஒன்றைப்பிறப்பித்திருப்பதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

இதிலிருந்து ஹோசிமின் படைக்குத் தானாகவே வலிய வந்து சேவை செய்வது குறைந்து வருகிறது தெரிகிறது என்று இங்குள்ள விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

பாவ்டே ராணுவத்திலிருந்து ஒருவர் ஓடிவிட்டால் ஹோசிமின் ராணுவத்திலிருந்து 4 பேர் ஓடிவிடுவதாக பிரெஞ்சு ராணுவ வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஹோசிமின்னின் இப்புது உத்திரவினால் பாவ்டே பக்கம் சேருபவர்கள் மீது பழிவாங்கப்படலாம் என்று தெரிகிறது.

ஹோசிமினுக்குப் போதிய ஆயுததளவாட சப்ளைகள் கிடைத்திருப்பதின் காரணமாகவே அவர்படை திரட்டும் உத்திரவைப் பிறப்பித்திருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

ஆக்கவேலையில் ஈடுபட அனைவரும் வாரீர்!

இயக்கம் வலுப்பெற உண்மை உழைப்பாளிகள் தேவை

வளர்ந்துவரும் ஆதரவை வகைபடுத்தி ஆவனசெய்வோம்

குறிஞ்சிப்பாடி மாநாட்டில் தோழர் சாம்பசிவம் வரவேற்புரை

தென்னார்க்காடு மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டில் 12-3-50 ஞாயிறன்று நடைபெற்ற வரவேற்புத் தலைவர் தோழர் இரா. சாம்பசிவம் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:—

மாநாட்டினைச்சிறப்பிக்கவந்திருக்கும் பெரியோர்களே! தாய்மார்களே! உங்களுக்கு முதற்கண் வரவேற்புக் குழுவினரின் சார்பாக எனது வணக்கத்தைக் கூறி, வருக வருக என உங்களனைவருக்கும் நல்வரவு கூறுகிறேன். உங்களை வரவேற்கும் வாய்ப்பு பெற்றமைக்கும் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

நமது பொதுச் செயலாளரான தோழர் அண்ணாத்துரை அவர்களையும், எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி தங்கள் தங்கள் பணியினை தேக்கிக்கொண்டு மாநாட்டைச் சிறப்பிக்க வந்திருக்கும் தலைவர், திறப்பாளர், சொற்பொழிவாளர்களுக்கும், மாநாட்டு பிரதிநிதிகளுக்கும், இங்கு குழுமியிருக்கும் மற்றெல்லோருக்கும் என்னது மகிழ்ச்சியையும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கட்டளையிடுங்கள்!

நமது இயக்கத்துக்கு இம்மாநாடு 4-வது ஆகும். மூன்று மாநாடுகள் சிறப்பாக நடந்தேறிவிட்டபிறகு நாம் இன்று இங்கு கூடியுள்ளோம். மாநாடுகள் நடத்துவது ஆக்கவேலைகளுக்கு ஊக்கம் தருவதற்கு மட்டுமல்லாமல் குறைகள் நீங்கி இயக்கம் மேலும் உயர்வடையவும், திட்டங்கள் தீட்டவுமாகும். நமது இயக்கம் ஏன் பிரிந்தது என்பதைப்பற்றி இனிமேல் பேசவேண்டிய நிலையே இல்லை. அந்த அளவிற்கு நமது பிரசாரம் திக்கெட்டும் பரவிவிட்டது.

நாம் இனி செய்யவேண்டியது என்ன? என்பதை யோசித்து நமது தலைவர்களுக்கு இன்னின்ன செய்யுங்கள் என்று நம்முடைய கொள்கை பற்றியும், செயலாற்றும் திறனையும் முன் வைத்து கட்டளையிடவே நாம் இங்கு கூடி, அவர்களை அழைத்துள்ளோம். நான் இது சமயத்தில் நம் தலைவர்களுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறேன். அதாவது நமக்கு மக்களின் ஆதரவுமட்டும் இருந்துவிட்டால் போதாது, நமது கொள்கைகள் வலிமையுள்ளவையாகவும், மேம்பாடுடையதாகவும் இருப்பதால்மட்டுமே நாம் திருப்தியடைந்து விடமுடியாது. எந்த அளவுக்கு இயக்கத் தோழர்களும், பொது மக்களும் கட்சிக்கொள்கைகளைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறார்கள். அனுபவத்திற்குக் கொண்டுவருகிறார்கள். என்பதிலேதான் அதிக கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். சமதர்மமும் சீர்திருத்தமும் பேசிவந்த காங்கிரஸ் நிர்மாணகர்கள், ஏட்டளவோடு நின்றுவிட்ட காரணத்தால்தான் இயக்கத்தைப் பணக்காரர்கள் கையில் ஒப்படைத்துவிட்டு, தாங்கள் கொண்ட லட்சியத்தை நிறைவேற்ற முடியாதவர்களாக ஆகிவிட்டார்கள். நாமும் இயக்கம் பலப்படவேண்டுமென்கிற காரணத்துக்காக பதவிக்கும், புகழுக்கும் எதையும் செய்யலாம் என்று எண்ணுகிற பணக்காரர்களையோ, குத்தகைக்காரர்களையோ சேர்த்துக்கொண்டால், காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட கதிதான் நமக்கும் என்பதை இங்கு எச்சரிக்க விரும்புகிறேன்.

இன்று மக்கள் கலனுக்குத்தான். நாம் உழைப்பதும் பலன் கருதாது தான் என்று என்றும் உண்மை ஊழியர்கள் வசமே இன்றுபோல் என்றும் இயக்கம் இருக்கவேண்டியது மிக மிக அவசியம். இதைநான் இங்கு குறிப்பிட வேண்டிய அளவிற்கு சர்மவரிடையே தலைதூக்க ஆரம்பித்ததால், அதை முளையிலே கிள்ளி எறிய ஆவன செய்ய வேண்டுமென்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆக்கவேலையில் ஈடுபடுவோம்

குதம், வாதம் அறியாத, உலக அனுபவம் போதிய அளவிற்குப் பெறாத, மக்கள் நலனேதன்சொந்த நலன் என்று கருதி இருக்கும் வாலிபர்களாகிய நாம், செய்ய வேண்டிய காரியங்கள் பல உள. அதற்கான வழிவகைகள் என்னென்ன என்பதை ஆராயவே நாம் இங்கு கூடியுள்ளோம். நமது முயற்சி, எம். எஸ்., பாகவதர், போன்ற சிறந்த பாடகர்களின் கானத்தைக் கேட்டு ரசித்துவிட்டுச் செல்வதுபோல இங்கு கூடியிருக்கும் பேச்சாளர்களின்சொற்பெருக்கிலே மட்டும் மயங்கி விடாது, கருத்துக்களையும் ஆராய்ந்து, பகுத்தறிந்து அவற்றை வாழ்க்கையில் கடைபிடிக்க ஆவன செய்யவேண்டுமென்பதற்காகவே இம்மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. மிகுந்த கஷ்டத்திலே, சாமானை வெருட்செலவிலே என்பதை நீங்கள் உணர்ந்து பார்க்கவேண்டும் பருவமழை தவறியதால் விவசாயிகள் மிகுந்த இன்னலுற்றிருக்கும் இக்நேரத்தில், நெசவாளர்களின் தொழில் தேய்ந்துபோயிருக்கும் நேரத்திலே ஏன் தொழிலாளருக்கேயே தொல்லை மிக்க நேரத்திலே பொதுவாக எல்லா சமூக மக்களும் திருப்தியான வாழ்க்கை வாழமுடியாத நேரத்திலேதான் இம்மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது என்பதைநாமும் மறந்துவிடக்கூடாது. மாநாடு தேர்திருவிழா வல்ல, பிரசாரம், ஆக்கவேலைகள், செய்தவேலைகளை பரிசீலித்தல், செய்ய வேண்டிய வேலைகளுக்குத் திட்டம் தீட்டுதல் போன்ற காரியங்களுக்குத்தான் கூட்டப்படுவதாகும். நாம் கூட்டியிருக்கும் இம்மாநாடு சிறப்படைய அனைக்கும் எனமுழுமனதுடன்நம்புகிறேன். தோழர் அண்ணாத்துரை அவர்கள் முன்னிலையிலேஇரவும்பகலும் கனவிலும் நனவிலும் இயக்க வளர்ச்சியினையும், இயக்கத்தொண்டர்களின் ஒழுக்கவளர்ச்சியினையும் கருதி உழைக்கும் தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையிலே, இம்மாவட்டத்தின், ஏன் இம்மாகாணத்தின் பெருத்த சமூகமான வன்னிய சமூகத்தைச் சார்ந்தவரும், நமது அறிவியக்கத்தின் சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமான தோழர் கணேசன் அவர்கள் திறந்து வைக்க மாநாடு ஆரம்பமாக இருக்கிறது என்பதைக்கொண்டே மாநாடு சாதிக்கப்போகும் காரியங்களை யூகித்தறியலாம். அழைக்கப்பட்டிருக்கும் சொற்பொழிவாளர்களோ மக்கள் கருத்தைக் கவர்ந்த பேச்சாளர்கள் என்பது சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதொன்றல்ல. கூடி இருக்கும் நாமோ பகுத்தறிவுப் பாதை வழிசெல்ல விரும்பும் காளைகள். கூடியிருக்கும் இடமோ, உலகத்திற்கே சிறந்த ஒரு நீதி நூலைத் தந்த உலகப் பெருந்தகை திருவள்ளுவர் மன்றலின் நிழலில்.

உண்மையாளர் தேவை!

நீதி கேட்டு, நீதி பெறாத நாம் நீதிவழங்க புறப்பட்டுள்ளோம். இதை மனதில் வைத்து நீதியோடு, நீதியைப் பெறவேண்டிய வழிவகைகளில் இயக்கத்தை நடத்திச் செல்லுங்கள் எனத்தலைவர்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன். நாமும் தலைவர்களுக்கு ஊக்கம் தரும் முறையிலே நம்மாலான எதையும் நல்லமுறையிலே செய்யத் தயங்கக்கூடாது. நம்மிலும் அவர்கள் வேலை தடைபடும். அரசாங்கமோ நமதியக்கத்தை அடக்குவதிலே அதிக அக்கரை காட்டுகிறது. காரணம், நாட்டிலே தன்மான ஆட்சி சமதர்ம ஆட்சி ஏற்படக்கூடாது என அரசாங்கம் கருதுவதால்தான். அரசாங்கத்தின் கவனம் அதிகமாக நம் பக்கம் திருப்பப்பட்டிருக்கும் இந்நேரத்திலே, நாம் ஆலோசித்தே எதையும் செய்ய வேண்டி இருக்கிறது. நம் முழு ஆதரவும் இயக்கத்தை நடத்திச் செல்பவர்களுக்கு இருக்கிறது என்பதை நம்பிக்கையோடு உணரும்படி செய்ய வேண்டியது. தொண்டர்களாகிய நம் முதற்கடமை இயக்கத்தின் பலம் சேரும் கூட்டத்தைக்கொண்டு மட்டும் அளந்துவிட முடியாது. எத்தகைய தியாகத்துக்கும் தயாராக இருக்கும் தொண்டர்கள், தன்னலமற்ற அறிஞர்கள், உழைப்பாளிகள் இவர்களின் எண்ணிக்கையைக் கொண்டேதான் இயக்கத்தின் பலத்தை மதிப்பிட வேண்டியிருக்கிறது.

திட்டம் தாருங்கள்

இத்தகையோரின் எண்ணிக்கை பெருகவே நாம் பாடுபடவேண்டும் என்பதை உணர்த்தவே இம்மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. எனெனில் செய்த வேலைகளோ சிறிது. இனி செய்யவேண்டிய வேலைகளோ மிகப் பெரிதுமட்டுமல்ல, கடினமானதுங்கூட. ஆகவே உழைக்கிறோம் திட்டத்தைத் தாருங்கள் என்று தலைவர்களை சேர்மையின் பிறப்பிடமாகிய திருவள்ளுவருடைய மன்றலின் கீழ் கூடிக் கேட்கிறோம். பிரிந்துகிடக்கும் சமூகங்களை ஒன்று சேர்த்துப் பிற்போக்கான சமூகங்களுக்கு முன்னிடம் கொடுத்து முற்போக்கடையச் செய்யுங்கள் என்று கூறுகிறேன்.

இம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பிற்போக்கான ஆனல் மக்கள் தொகையில் அதிக எண்ணிக்கையைக்கொண்ட சமூகத்தினரைப் புறக்கணித்ததால் செல்வாக்கிழந்தது காங்கிரஸ். பிற்போக்கான சமூகங்களுக்கு உரிய இடத்தை வழங்குவது நம் வேலை அல்ல. அந்த வேலையை அவர்கள் விழிப்புணர்ச்சிபெற்றுவிட்ட காரணத்தால் அவர்களே தங்களுக்குரிய பங்கை பெற்றுக்கொண்டு மற்றச் சமூகத்தினருக்கும் நீதி வழங்க ஆரம்பித்துவிட்டார்கள்.

சமதர்மம் தேவை

இம் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே ஆதித்திராவிட மக்களின் நிலை மிக மிக மோசமாகவே இருந்துவருகிறது. நாம் சேரியிலே காதிருந்தவாறும் அவர்களின் தலைவர்கள் கூறற்போனார்களோ காங்கிரசின் பிடிப்பிலே சிக்கி சமூகத்தைக் காட்டிக்கொடுக்கும் பண்புள்ளவர்களாகிவிட்டார்கள். ஜாதி முறையைப் போக்கவருகின்ற நாம் சமூக ஊறுகளுக்கு இடமளிக்காது வேற்றுமைகளைக் களைந்து எல்லோருக்கும் சமசந்தர்ப்பத்தை அளித்து ஒற்றுமையுடன் வாழ வழி வகுக்கும் இம் மாநாடு என்று கருதுகிறேன். நாம் எல்லோரும் ஒரு கொடியின் கீழ் நின்று போராட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. நமது உயிர்ப் பிரச்னையான நாட்டுப் பிரிவினையிலும் சமதர்மத்தை நிலைநாட்டுவதை செய்வதிலும்தான் நம் அறிவையும், ஆற்றலையும், காசு உழைப்பினையும் நல்க வேண்டியவர்களாவோம். இவைகளுக்கான எத்தகைய தியாகங்களுக்கும் நாம் நம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும். இம் மாத்தான நன்னாளில்.

மாகாண மாநாடு கூட்டி திட்டங்கள் தீட்டுமுன், கூட்டம் இம்மாநாடுகள் பிரசார மாநாடுகள் போன்றும் இயக்கத்திற்கு நல்ல ஆதரவு உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகவும் கருதப்படும் என்றே நான் நினைக்கிறேன். காரணம் மாகாண மாநாட்டுக்கு முன் திட்டங்கள் தீட்ட முடியாது. முடிந்தாலும் நடைமுறைக்கு வராது என்று நம்புவதால், இவ்வாண்டிற்குள்ளாகவே மாகாண மாநாடு கூட்டிவிட வேண்டுமென்று இன்று இம்மாவட்ட மக்கள் சார்பாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆதரவு வளர்கிறது!

நாமும் அதற்குள் பல கழகங்களை அமைத்து பிரசாரங்கள் நல்ல முறையிலே நடத்தி, அங்கத்தினர்கள் சேர்த்தல் போன்ற அடிப்படை வேலைகளைச் சரிவர செய்து முடிக்க வேண்டுமென்றும், அம் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தோழர்களுடன் மக்களும் ஒன்று சேர்வதற்கு அடையாளமாக மக்கள் பெரிதும் அங்கத்தினர்களாகச் சேர்ந்து ஆதரவு தருமாறும் கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாநாட்டின் நிதி வசூலுக்கென சிலவட்டங்களில் நான் சுற்றுப் பயணம் செய்தபோது பல இடங்களில் இயக்கத்தில் சேராத பல நிறைபட்ட மக்களும் ஆதரவு தந்தது எனக்கே வியப்பாக இருந்தது. இம்மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே இருக்கும் ஆதரவை ஒன்று திரட்ட நன்முக வேலை செய்தால் இயக்கப்பணியிலே மற்ற மாவட்டத்தினருக்கு எந்த வகையிலும் குறையாத அளவு பணிபுரிய முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

ஆர்வம் இருக்கிறது; ஆனல்...?

ஆர்வம் இருக்கிறது ஆனல் உழைக்க வாய்ப்பும், வசதியும் பெற்ற உழைப்பாளிகள்தான் இல்லை, இதுவும் ஒரு முக்கிய குறைதான். நிலைமையும் அவசியம் உணர்ந்தும் உழைக்க முடியாத நான் மாவட்டக் குழுவில் ஒரு முக்கியஸ்தனாக கருதப்பட்டுவருவது உண்மையில் எனக்கே வெட்கமாக இருக்கிறது. இம்மாநாட்டிற்குப் பிறகாவது என்போன்ற செயலற்றவர்களுக்குப் பொறுப்புள்ள பதவிகளில் இடம் கொடுக்காமல் நல்ல உழைப்பாளிகளுக்கு இடம் கொடுத்து ஆவன செய்யுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

இம் மாநாட்டில் பல குறைகள் இருக்கலாம், எங்களுக்குப் போதிய அனுபவம் இல்லாத காரணத்தாலும், எதிர்பாராதவிதமாக இரண்டே நாளில் பந்தல் இடம் மாற வேண்டி போய்விட்டபடியாலும், இளைஞர்களாகிய எங்கள் ஏற்பாட்டில் இருக்கும் குறைகளைப் பொறுத்தருளுமாறு பணிவுடன் வேண்டிக்கொண்டு, நம் பொதுச் செயலாளர் அண்ணாத்துரை அவர்களையும், தலைவர் நெடுஞ்செழியன் அவர்களையும், திறப்பாளர் கணேசன் அவர்களையும், மற்றும்தோழர்கள் சிற்றரசு, நடராசன், சம்பத், சீனுவாசன், அரங்கண்ணல், இளம்வழுதி போன்றோரையும் மற்றும் மாநாட்டுக்கு வந்திருக்கும் பெரியோர்களையும், வாலிபர்களையும் தாய்மார்களையும் ஒருங்கே மீண்டும் ஓர் முறை வரவேற்று, என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இனி நடப்பவை

பொன்னாச்சி:—19-3 50 மாலை 6-30 மணியளவில் இவ்வூர் தேர்நிலை வெளியில் தி. மு. வாலிபர் கழகச் சார்பில் தோழர் பி. நடராச தலைமையில் தோழர் ஈ. வே. கி. சம்பத், என். ஈ. பாலகுரு, ஏ. வி. எம். சாமி, கோ. கோபால் ஆகியோர்சொற்பொழிவு ஆற்றுவார்கள். ஒலிபெருக்கியும், பெண்களுக்குத் தனியிடமும் உண்டு.

* * *

சென்னை:—மறுமலர்ச்சி சொற்பயிற்சி மன்றம், சைதாப்பேட்டை இம்மன்றத்தின் சொற்பயிற்சிக் கூட்டம் 17-3-50 அன்று வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு, சடைபப்ப முதலித்தெருவிலுள்ள 2 வது எண்ணுள்ள இல்லத்தின் மேல்மாடியில் கூடும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வரும்படி அழைக்கப்படுகிறார்கள்.

* * *

செல்வபுரம் (கோவை):-19-3-50 ஞாயிறு மாலை 3-மணிக்கு இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். சில முக்கிய பொருள் பற்றி ஆலோசிக்கப்படும். ஆகையால் எல்லா உறுப்பினர்களும் தவறாது வரவேண்டப்படுகிறார்கள்.

* * *

வேலூர்:— திருவள்ளுவர்சொற்பயிற்சிக் கழகக் கூட்டம், 19-3 50 ஞாயிறு காலை பத்து மணிக்கு கான்அன்திரா தெருவிலுள்ள தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது தோழர் கு. மு. அண்ணல்தங்கோ பேசுவார். உறுப்பினர்களனைவரும் வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

திருவள்ளுவர் மன்ற நிறுவனம்

சென்னை, மார்ச். 8—

சென்னைக் கீழ்ப்பாக்கத்தில் 1—3—50 மாலை 6½ மணிக்கு தோழர் எ. கே. சாமி அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் திருவள்ளுவர் மன்றம் நிறுவப்பட்டு, கீழ்க்கண்டபடி செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர்:-ஏ. சுந்தரம், துணைத் தலைவர்:—இரா. செ. ஜெகதீசன், செயலாளர்-நா. பொ. முருகேசன் துணைச் செயலாளர்—கே. ர. கோதண்டபாணி, பொருளாளர்—சா. இராபர்ட்.

நிர்வாக உறுப்பினர்கள்:— சு. தங்கராஜ், சா. சீனிவாசன், ஏ. பேரனுட். கி. டேவிட், மா. கி. கிருஷ்ணன், ம. வசந்தன், ஏ. ஜோதிநாதன், எ. ஜெயராஜ், ஓ. பி. கன்னியப்பன், ப. குருநாதன்.

மாவட்டக் கழக உறுப்பினர்கள் ஏ. சுந்தரம், நா. பொ. முருகேசன்.

பிரஞ்சுத் தலைவர் பிச்சை அளிக்கிறார்!

லண்டன், மார்ச். 14—

லண்டனில் மூன்று நாட்கள் தங்கியிருந்த பிரெஞ்சு பிரஸிடெண்ட் வின்சென்ட் ஆரியோல் லண்டனிலுள்ள ஏழைகளுக்கிடையே விநியோகிப்பதற்காக லார்ட் மேயரிடம் ரூ 6500 நன்கொடையாக அளித்திருக்கிறார்.

சத்தியவாணிமுத்து வானொலிப் பேச்சு

17 3 50 வெள்ளிக்கிழமை பகல் 1-மணிக்கு சென்னை வானொலி நிலையத்திலிருந்து தோழியர் சத்தியவாணிமுத்து "பெண்கள்—வள்ளுவர் கருத்து" என்பது பற்றி பேசுவார்கள்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1